**ஜூன் – 02**

# TNPSC துளிகள்

- சென்னையில் உள்ள மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம் (CICT) ஆனது, திருக்குறளை குருக், கோண்டி, மால்டோ மற்றும் பிரஹுய் ஆகிய நான்கு நடுத்தர மற்றும் சிறிய திராவிட மொழிகளில் மொழி பெயர்க்கத் தொடங்கியுள்ளது.
- ஐதராபாத்தைச் சேர்ந்த விஸ்வநாத் கார்த்திகே பதகாந்தி (16 வயது நபர்) ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள மிக உயரமான புகழ்பெற்ற 7 மலைச் சிகரங்களில் ஏறிய இளம் இந்தியர் மற்றும் உலகின் இரண்டாவது இளம் நபர் என்ற பெருமையினைப் பெற்று உள்ளார்.
- ஒன்றியப் பிரதேச மாவட்டமான டையூ, 11.88 மெகாவாட் உற்பத்தித் திறனை அடைந்து சூரியசக்தி மூலம் அதன் மின்சாரத் தேவைகளில் 100 சதவீதத்தினைப் பூர்த்தி செய்து கொள்ளும் இந்தியாவில் முதல் பகுதியாக மாறியுள்ளது.
- மத்தியப் புலனாய்வுப் பிரிவு (CBI) ஆனது, சக்ரா-V நடவடிக்கையின் கீழ் ஜப்பானியக் குடிமக்களை இலக்காக கொண்ட ஒரு பன்னாட்டு இணையவெளிக் குற்றக் குழுவின் ஆறு உறுப்பினர்களைக் கைது செய்துள்ளது.
- அரசுக்குச் சொந்தமான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனமான BSNL ஆனது, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலாண்டில் 280 கோடி ரூபாய் நிகர இலாபத்தை ஈட்டியதோடு, இது 18 ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளில் நேர்மறையான பணப் புழக்கங்களைக் குறிக்கிறது.
- ஏர்பஸ் மற்றும் டாடா குழுமத்தின் புகழ்மிக்க வான்வெளி உற்பத்திப் பிரிவான டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் (TASL) நிறுவனமானது, கர்நாடகாவின் கோலார் எனுமிடத்தில் H125 ஹெலிகாப்டர்களுக்காக என்று இந்தியாவின் முதலாவது தனியார் நிறுவனத்தின் இறுதிகட்ட ஒருங்குசேர்ப்பு மையத்தினை (FAL) அமைக்க உள்ளது.

# தேசியச் செய்திகள்

## கௌரவப் பதவி உயர்வு திட்டம்

| Honorary Rank Mapping | | | |
|---|---|---|---|
| **CAPFs Retired Rank** | **Honorary Rank** | **Assam Rifles Retired Rank** | **Honorary Rank** |
| **Constable** | Head Constable | Rifleman | Havildar |
| **Head Constable** | Assistant Sub-Inspector | Havildar | Warrant Officer |
| **Assistant Sub-Inspector** | Sub-Inspector | Warrant Officer | Naib Subedar |
| **Sub-Inspector** | Inspector | Naib Subedar | Subedar |

- மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) மற்றும் அசாம் ரைபிள்ஸ் (AR) ஆகியவற்றில் அதிகாரி பதவிக்குக் கீழே உள்ள ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு என்று கௌரவப் பதவிகளை வழங்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒரு முன்னெடுப்பின் மூலம் காவலர்/கான்ஸ்டபிள் முதல் துணை ஆய்வாளர் வரையிலான ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்களின் இறுதிப் பணி நாளில் கௌரவப் பதவி உயர்வு வழங்கப்படும்.


- இருப்பினும், இந்த நடவடிக்கையானது கூடுதல் நிதி அல்லது ஓய்வூதிய சலுகைகளைக் கொண்டிருக்கவில்லை.

## படைப்பிரிவுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு சட்டத்தின் கீழ் விதிகள் 2023

- படைப்பிரிவுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு (கட்டளை, கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஓர் அரசிதழ் அறிவிப்பு மூலம் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது படைப்பிரிவுகளுக்கு இடையிலான அமைப்புகளின் (ISO) பயன் மிகு கட்டளை, கட்டுப்பாடு மற்றும் திறம் மிக்க செயல்பாட்டினை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டமானது ஆயுதப் படைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் பொருந்தும் வகையில் குறிப்பிட்ட விதிகள் மற்றும் சில நிபந்தனைகளை மாற்றாமல், ஒழுங்குமுறையையும் சீரான நிர்வாகத்தையும் பேண உதவுகிறது.




## "Red Teaming"- சிந்தூர் நடவடிக்கை




- முதன்முறையாக, சிந்தூர் நடவடிக்கையானது, அதன் செயல்பாட்டுத் திட்டமிடலின் ஒரு பகுதியாக "Red Teaming" என்ற கருத்தாக்கத்தினை அமல்படுத்தியது.

- Red Teaming என்பது எதிரியின் மனநிலை, தந்திரோபாயங்கள் மற்றும் அதன் எதிர் நடவடிக்கை முறைகளை மிகவும் நன்கு அறிந்த நிபுணர்களின் ஒரு சிறிய குழுவைத் திட்டமிடல் செயல்பாட்டில் ஈடுபடுத்துவதை உள்ளடக்கியது.
- இந்திய இராணுவம் ஆனது இந்தச் செயல்முறையினை ஒரு நிகழ்நேர நடவடிக்கையில் பரிசோதித்தது இதுவே முதல் முறையாகும்.
- இந்தக் கருத்து ஆனது, நீண்ட காலமாக வெளிநாடுகளில் இராணுவ நடவடிக்கைகளின் (குறிப்பாக பனிப்போரில்) ஒரு முறைப்படுத்தப்பட்ட அங்கமாக இருந்து வருகிறது.
- இந்திய இராணுவத்தில், இந்தக் கருத்தாக்கத்திற்கு மகாபாரதத்தில் பாண்டவர்களின் ஆலோசகரின் பெயரைக் கொண்டு 'விதுர் வக்தா' என்று பெயரிப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது ஏற்கனவே சிம்லாவை தலைமையிடமாகக் கொண்ட அதன் பயிற்சிக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்குள் (ARTRAC) ஒரு REDFOR (சிவப்புப் படைகள்) என்ற ஒரு பிரிவைக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கான கொள்கையை வடிவமைத்தல்

**Table 1.1.** Classification of the MSME Units

| Enterprise | Earlier classification (July 2020) | | Revised Classification (April 2025) | |
|---|---|---|---|---|
| | Investment in plant and machinery | Turnover | Investment in plant and machinery | Turnover |
| Micro | Not exceeding Rs. 1 crore. | Not exceeding Rs. 5 crores. | Not exceeding Rs. 2.5 crore. | Not exceeding Rs. 10 crore. |
| Small | Not exceeding Rs. 10 crores. | Not exceeding Rs. 50 crores. | Not exceeding Rs. 25 crores. | Not exceeding Rs. 100 crores. |
| Medium | Not exceeding Rs 50 crores. | Not exceeding Rs. 250 crores. | Not exceeding Rs 125 crores. | Not exceeding Rs 500 crores. |


- நிதி ஆயோக் அமைப்பானது, "நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்காக என்று கொள்கையை வடிவமைத்தல்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நடுத்தரத் தொழில் துறை நிறுவனங்களை இந்தியப் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சிமிக்க இயந்திரங்களாக மாற்றுவதற்கான ஒரு விரிவான செயல் திட்டத்தினை இது வழங்குகிறது.
- MSME துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 29% பங்களிக்கிறது.
- அவை ஏற்றுமதியில் 40% பங்களிக்கின்றன என்பதோடு மேலும் 60 சதவீதத்திற்கும் அதிகமானப் பணியாளர்களைப் பணியமர்த்தியுள்ளன.
- பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்களில் 97% குறு நிறுவனங்கள், 2.7% சிறு நிறுவனங்கள் மற்றும் 0.3% மட்டுமே நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் ஆகும்.
- இருப்பினும், இந்த 0.3% நடுத்தர நிறுவனங்கள் MSME ஏற்றுமதியில் சுமார் 40% என்ற அளவிற்குப் பங்கினை அளிக்கின்றன.

## திருத்தப்பட்ட பொருளாதார மூலதனக் கட்டமைப்பு 2025

- இந்திய ரிசர்வ் வங்கியானது, அதன் பொருளாதார மூலதனக் கட்டமைப்பு (ECF) மற்றும் இடர் வழங்கல் விதிமுறைகளை திருத்துவதன் மூலம் அதன் நிதி சார் மீள்தன்மையை வலுப்படுத்த ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
- இந்தத் திருத்தமானது பிமல் ஜலான் குழு பரிந்துரைத்தபடி, ஐந்து ஆண்டு காலக் கட்ட

மதிப்பாய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது ECF ஆனது, சுமார் ஐந்து ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது அதன் பல்வேறு அபாயங்களை ஈடு கட்டுவதற்கு வேண்டி எவ்வளவு மூலதனத்தைப் பேண வேண்டும் மற்றும் அதன் உபரி வருமானத்தில் எந்த அளவு இந்திய அரசாங்கத்திற்கு மாற்றப் படலாம் என்பதை இந்த ECF நிர்வகிக்கிறது.
- இந்தப் புதிய கட்டமைப்பு ஆனது சுமார் 4.5-7.5 சதவீத எதிர்பாராத இடர் இடையக (CRB) வரம்பை அனுமதிக்கிறது என்பதோடு இது அதன் முந்தைய 5.5-6.5 சதவீத வரம்பில் இருந்து விரிவுபடுத்தப்பட்டதாகும்.
- 2019 ஆம் நிதியாண்டு முதல் 2022 ஆம் நிதியாண்டு வரையில், RBI ஆனது 5.50 சதவீத CRB என்ற வரம்பை பேணியது.
- 2023 ஆம் நிதியாண்டில், இது சுமார் 6 சதவீதமாகவும், 2024 ஆம் நிதியாண்டில் சுமார் 6.5 சதவீதமாகவும் அதிகரித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியமானது, 2024-25 ஆம் நிதியாண்டிற்கு இந்திய அரசாங்கத்திற்கு என தோராயமாக 2.69 டிரில்லியன் டாலர் உபரி பரிமாற்றத்திற்கு ஒப்புதல் அளித்தது.




## "நிவேஷக் ஷிவிர்" முன்னெடுப்பு





- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (IEPFA) ஆனது, SEBI உடன்

இணைந்து, "நிவேஷக் ஷிவிர்" என்ற அதன் மிக முதன்மையான முன்னெடுப்பினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

- உரிமை கோரப்படாத ஈவுத் தொகை மற்றும் பங்குகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கு ஒரே இடத்தில் தீர்வு காணும் வகையில் இந்த முன்னெடுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது முதலீட்டாளர் சேவைகளுக்கான நேரடி அணுகலையும் வழங்குகிறது.
- IEPFA உடன் உள்ள உரிமை கோரப்படாத பங்குகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 1.1 பில்லியனுக்கும் அதிகமாகும் என்பதோடு இதன் மதிப்பு சுமார் 1 லட்சம் கோடி ரூபாய ஆகும்.
- உரிமை கோரப் படாதப் பங்குத் தொகைகளின் மொத்த மதிப்பு சுமார் 6,000 கோடி ரூபாய் ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தியான்வென்-2 ஆய்வுக்கலம்





- சீன நாடானது, ஒரு குறுங்கோளிலிருந்து மாதிரிகளை எடுத்து ஆராய்ச்சிக்காக என்று புவிக்குக் கொண்டு வருவதற்கான நாட்டின் முதல் ஆய்வுப் பயணமாக தியான்வென் 2 என்ற விண்வெளி ஆய்வுக் கலத்தினை விண்ணில் ஏவியுள்ளது.
- இது புவிக்கு அருகிலுள்ள காமோ'ஓலேவா (2016 HO3 என்றும் குறிப்பிடப் படுகிறது) என்ற ஒரு சிறிய, அசாதாரணமான குறுங்கோளினை நோக்கிச் செல்கிறது.
- இது 2027 ஆம் ஆண்டின் ஒரு நாளில் பூமிக்கு அதன் மாதிரிகளை கொண்டு வரும்.
- இந்த குறுங்கோள் ஆனது, ஆரம்பகாலச் சூரியக் குடும்பமானது எவ்வாறு உருவானது என்பதை அறிவியலாளர்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும் பண்டைய பொருட்களைக் கொண்டுள்ள ஒரு "உலவும் புதைபடிவமாகும்".
- தியான்வென் 2 ஆனது 311P என்ற வால் நட்சத்திரத்தினையும் ஆராய உள்ளது.
- இந்த வால் நட்சத்திரம் செவ்வாய் மற்றும் வியாழன் இடையே உள்ள முக்கியக் குறுங் கோள் மண்டலத்தில் 311P சுற்றி வருகிறது.

## AMCA திட்டம்

- இந்தியா தனது இலட்சியமிகு மேம்படுத்தப் பட்ட நடுத்தரப் போர் விமான (AMCA)

உற்பத்தித் திட்டத்திற்கு அனுமதியளித்துள்ளது என்பதோடு இது ஐந்தாம் தலைமுறை நுட்பம் சார்ந்த ரேடாருக்குப் புலப்படாத ஜெட் போர் விமான உற்பத்தித் திட்டமாகும்.

- இந்த AMCA திட்டம் ஆனது இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் கீழ் வான்வழி மேம்பாட்டு நிறுவனம் (ADA - Aeronautical Development Agency அல்லது ஏரோநாட்டிகல் டெவலப்மென்ட் ஏஜென்சி) என்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகிறது.
- AMCA திட்டம் என்பது 25 டன் எடையுள்ள இரட்டை இயந்திர ரேடாருக்குப் புலப்படாத பல் செயல்பாட்டுப் போர் விமானமாகும் என்பதோடு இதில் அதிநவீன ரேடாருக்குப் புலப்படாத வடிவமைப்பு, உணர் கருவி இணைவு மற்றும் மேம்பட்ட வானியக்கவியல் அம்சங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டம் ஆனது இந்திய விமானப் படையை (IAF) அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற அடுத்தத் தலைமுறை நுட்பம் கொண்ட வான்வழிப் போர் அம்சங்கள் கொண்ட நாடுகளின் உயரடுக்குக் குழுவினுள் ஒன்றாக மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இராட்சத இறால் அலிசெல்லா ஜிகாண்டியா

- உலகின் சுமார் 59% பெருங்கடல்களில் அரிய இராட்சத இறால் இனமான ஜிகாண்டியா காணப் படுகிறது.
- அலிசெல்லா ஜிகாண்டியா ஆனது இதுவரையில் பதிவு செய்யப்பட்ட மிகப் பெரிய

ஆழ்கடல் ஆம்பிபாட்களில் (நீரருகே வாழும் நண்டு போன்ற உயிரினம்) ஒன்றாகும்.


- இது 34 செ.மீ நீளம் வரை வளரக் கூடிய ஒரு இராட்சத ஆம்பிபாட் ஓடுடைய மீன் ஆகும்.
- அட்லாண்டிக், பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களில் உள்ள ஆழ்கடலில் உள்ள 75 வெவ்வேறு தளங்களில் இருந்து சுமார் 3,890 முதல் 8,931 மீட்டர் ஆழம் வரையில் A. ஜிகாண்டியா காணப் பட்டதற்கான 195 பதிவுகளை ஆராய்ச்சியாளர்கள் தொகுத்து உள்ளனர்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ILO-NASK அறிக்கை 2025

Figure 6. Frequency of use of GenAI, by 1-digit ISCO-08




- 'Generative AI and Jobs: A Refined Global Index of Occupational Exposure' என்று பெயரிடப்பட்ட

அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் போலந்தின் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (NASK) இணைந்து இந்தக் கூட்டு ஆய்வறிக்கையினை வெளியிட்டது.
- உலகளவில் சுமார் 4 வேலைவாய்ப்புகளில் 1 வேலைவாய்ப்பு, இயற்றறிவு கொண்ட செயற்கை நுண்ணறிவின் தாக்கத்திற்கு (GenAI) உள்ளாக வாய்ப்புள்ளது.
- மிக அதிக வருமானம் உள்ள நாடுகளில், பெண்களின் வேலைவாய்ப்புகளில் 9.6% ஆனது அதிக தானியங்கி இயந்திரங்களினால் ஆபத்தை எதிர்கொள்கின்றன என்ற நிலையில் இது ஆண்களில் 3.5% ஆக உள்ளது.
- எழுத்தர், ஊடகம், மென்பொருள் மற்றும் நிதி தொடர்பான தொழில்கள் அதிகளவில் இதன் தாக்கத்திற்கு உள்ளாகும் ஆபத்தில் உள்ள அதே நேரத்தில் இத்துறைகளில் முழு தானியக்கத்திற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கோழிக்கோட்டின் மாவட்டச் சின்னங்கள்

- அதிரண்ணி (மெலஸ்டோமா மலபாத்ரிகம்) கோழிக்கோடு மாவட்டத்தின் மலராகவும், மெனிப்பொன்மன் என்பது (செய்க்ஸ் எரிதாக்கா) அம்மாவட்டத்தின் பறவையாகவும் அறிவிக்கப் பட்டது.
- மலபார் ரோஜா (பச்லியோப்டா பாண்டியானா) அந்த மாவட்டத்தின் வண்ணத்துப் பூச்சியாக அறிவிக்கப்பட்டது.
- ஈயகம் (ஹோபியா எரோசா) அதன் மாவட்ட மரமாக அறிவிக்கப்பட்டது.
- மிகவும் மென்மையான ரோமம் உடைய நீர்நாய் (லுட்ரோகேல் பெர்ஸ்பிசில்லாட்டா) அந்த மாவட்டத்தின் நீர்வாழ் விலங்காக அறிவிக்கப்பட்டது.
- பாதாள பூந்தரகன் (பாங்கியோ புஜியா) அதன் மாவட்ட மீனாகவும், இந்திய எறும்புத் திண்ணி (மானிஸ் கிராசிகாடேட்டா) அதன் மாவட்ட விலங்காகவும் அறிவிக்கப்பட்டது.
- இது கேரள மாநிலத்தில் முதல் மக்களின் பல்லுயிர்ப்பெருக்க பிரகடனம் ஆகும்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச செந்நாய்கள் தினம் 2025 - மே 28

- இந்த நாள் செந்நாய்கள் வளங்காப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அருகி வரும் நாய்கள் (குவோன் ஆல்பினஸ்) ஆனது இந்தியாவின் மேற்கு மற்றும்

கிழக்குத் தொடர்ச்சி மலைகள், மத்திய இந்தியா மற்றும் வட கிழக்கு இந்தியாவின் காடுகளில் காணப்படுகின்றன.

❖ இவை 'சீட்டி அடித்தல் ஒலி (விசில்)' மூலம் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்கின்றன.




# இதரச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டிற்கான ISSAR




❖ 2024 ஆம் ஆண்டிற்கான இந்திய விண்வெளிச் சூழ்நிலை மதிப்பீட்டு அறிக்கையை (ISSAR) இஸ்ரோ வெளியிட்டது.

❖ விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு (SSA) செயல்பாடுகளில் விண்வெளிச் சூழல் பற்றிய அறிவு, அச்சுறுத்தல்களை மதிப்பிடுதல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

❖ 2024 ஆம் ஆண்டில் இஸ்ரோ 10 மோதல் தவிர்ப்பு முயற்சிகளை (CAM) வெற்றிகரமாக மேற்கொண்டது.

❖ விண்வெளியில் உள்ள பிற பொருட்களுடன் அது மோதுவதிலிருந்து அதன் செயற்கைக்

கோள்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில், உலகளவில் 261 ஏவுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, 254 வெற்றிகரமானப் பயணங்களின் விளைவாக சுமார் 2578 செயல்பாட்டுச் செயற்கைக் கோள்கள் குழுவில் சேர்க்கப்பட்டன.
- 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை, இந்தியா 136 விண்கலங்களை விண்ணில் ஏவியது என்ற ஒரு நிலையில் இதில் 22 செயல்பாட்டுச் செயற்கைக்கோள்கள் புவி தாழ்மட்டச் சுற்றுப் பாதையில் (LEO) மற்றும் 31 புவி ஒத்திசைவுச் சுற்றுப்பாதையில் (GEO) உள்ளன.

## மாதவிடாய் காலச் சுகாதார ஆய்வு 2025

- **71.6% of Indian women find social media informative on periods, but only 11.5% trust it in emergencies.**
- **82.7% experience menstrual pain, yet 41.5% use no pain relief.**
- **87.8% use sanitary pads, while 5.7% opt for disposable period panties (Survey 2025).**
- **35.4% buy menstrual products online due to convenience.**
- **Globally, 500 million women lack access to menstrual hygiene facilities (UNICEF).**

- மாதவிடாய் ஆரோக்கியம் குறித்து சமூக ஊடகங்களில் மிகவும் ஆபத்தான தவறான தகவல்கள் பரவியிருப்பதாக கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது.
- இந்தியப் பெண்களில் சுமார் 71.6% பேர் சமூக ஊடகங்கள் மாதவிடாய் குறித்து தகவல் தருவதாகக் கருதுகின்றனர், ஆனால் அவசரக் காலங்களில் 11.5% பேர் மட்டுமே அதை நம்புகிறார்கள்.
- சுமார் 82.7% பேர் மாதவிடாய் வலியை அனுபவிக்கின்றனர், ஆனால் சுமார் 41.5% பேர் வலி நிவாரணத்தைப் பயன்படுத்துவதில்லை.
- யுனிசெஃப் தரவுகளின்படி, உலகளவில், சுமார் 500 மில்லியன் பெண்களுக்கு மாத விடாய் காலச் சுகாதாரப் பேணுதலுக்கான வசதிகள் கிடைக்கப் பெறுவதில்லை.
- இது பெண்களுக்கான சுகாதார நிபுணத்துவ அமைப்பான everteen என்ற அமைப்பால் வெளியிடப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★